**முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்**

முன்னிலை:-**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்.**

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் திங்கட்கிழமை

**அசல் வழக்கு எண்.112/2018-ல் இ.ம.எண் 4/2025**

R. கணேசன் .... மனுதாரர்/வாதி

/ எ தி ர் /

1. N. சதீஸ்குமார்
2. G.முத்துகுமார்
3. P. கார்த்திகேயன்
4. A. கார்த்திகேயன் .... எதிர்மனுதார்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்னர் 13.03.2026ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு B. வாசுதேவன், அவர்களும், 1ம் எதிர்மனுதார்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.விஜயகுமார், அவர்களும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.முருகேசன் அவர்களும் ஆஜராகியும், 2 மற்றும் 4 எதிர்மனுதாரர்கள்/2 மற்றும் 4 பிரதிவாதிகள் மனு விசாரணை அழைப்பின் போது ஆஜரின்றி தோன்றாத்தரப்பினர்களாகக் கருதப்பட்டும், மனு உரை, எதிருரை மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

**// உத்தரவு //**

இம்மனுவானது மனுதாரர்/வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு–151ன்படி தாக்கல் செய்து மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டதை பிராதை திருத்துவதற்கு ஏதுவாக வழக்கினை மறுதிறவு செய்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>**மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூல சுருக்கம்:**</u>

1ம் பிரதிவாதியால் 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயர்களில் 13.08.2014 ம் தேதி ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரை 6 ஆவது பத்தியில், வாதி, பார்த்தசாரதி என்பவரது விருப்பப்படி 1ம் பிரதிவாதியின் பெயரில் பார்த்தசாரதி தயார் செய்து கொண்டு வந்த 15.11.2011 தேதிய அதிகார ஆவணத்தை பொறுப்புக்காக பதிவு செய்தார். வாதிக்கு 1ம் பிரதிவாதியை யார் என்றே தெரியாது. அந்த அதிகார ஆவணம் உண்மையானதல்ல. அந்த ஆவணத்தில் ரூ.50/–மதிப்புடைய 6 முத்திரைத்தாள்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. அந்த முத்திரைத் தாள்களின் வரிசை எண்கள்.7000 முதல் 7002 வரை உள்ள மூன்று தாள்கள் 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்படாமல் சதாம் உசேன் என்பவர் பெயரில் வாங்கப்பட்டுள்ளன. அவை மூன்றும் 01.12.2011 ம் தேதி விற்பனை செய்யப்பட்ட ரூ.1000/– மதிப்புள்ள முத்திரைத் தாள்கள் ஆகும். மேற்சொன்ன 15.11.2011 தேதிய அதிகார ஆவணத்தில் வரிசை எண்கள்.7003

மற்றும் 7004 ஆகியவை 01.12.2011 தேதியில் ரூ.1000/– மதிப்புள்ள தாள்களாக திண்டுக்கல், சேவியர் ராஜ் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டதாக உள்ளது. மேற்சொன்ன ஐந்து முத்திரைத் தாள்களும் ரூ,50/– மதிப்புடைய தாள்கள் அல்ல. 1ம் பிரதிவாதி மேற்படி முத்திரைத் தாள்களை உற்பத்தி செய்து அதில் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளார். இந்த அதிகார ஆவணத்தை அடிப்படையாக வைத்து 11.08.2014 ம் தேதி 1ம் பிரதிவாதி 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயர்களில் மலரணையான ஒரு கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளார். சாட்சிய விசாரணை முடிந்து விவாதத்திற்காக அசல் வழக்கு வாய்தா ஏற்பட்ட நிலையில் 1ம் பிரதிவாதி பெயரில் பொறுப்புக்காக ஏற்படுத்தப்பட்ட 15.11.2011ம் தேதிய போலியான அதிகார ஆவணம் தொடர்பாக விளம்புகை பரிகாரம் கேட்க தெய்வாதீனமாக விடுபட்டுப் போய்விட்டது.15.11.2011ம் தேதிய அதிகார ஆவணம் இந்திய முத்திரைச் சட்டம் 1925 விதி 6–க்கு விரோதமானது. சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என விளம்புகைப் பரிகாரம் கோருவதற்காக திருத்தல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, வாதி தரப்பில் சாட்சிகள் முடிக்கப்பட்டதை மறுதிறவு செய்து உத்தரவிடவேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் இருப்பதாக இம்மனு தாக்கல் .

3) **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் ஏற்கப்பட்டு 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:–

அசல் வழக்கில் விசாரணை தொடங்கி சாட்சியங்கள் அனைத்தும் முடிவுற்று தற்போது விவாதத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் திருத்தல்

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலைக்கத்தக்கதல்ல. மனு உரைச் சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். 15.11.2011 அதிகார ஆவணம் பற்றி துலக்கியுள்ள சங்கதிகள் யாவும் சரியல்ல. 15.11.2011 ம் தேதிய அதிகார ஆவணத்தைப் பொறுத்து மனுதாரர் இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்னரே மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.3222 of 2018 தாக்கல் செய்யப்பட்டு அதில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு 3 ஆவது பத்தியில் *"admittedly, on the date of registration of sale deed, the third respondent is having valid power of attorney"* என்று தெளிவாக துலக்கப்பட்டுள்ளது. மேலும், அசல் வழக்கில் வா.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பதிவு அலுவலர் தன் முதல் விசாரணை சாட்சியத்தில் 6099 முதல் 6104 வரை ரூ.50– மதிப்புள்ள ஆறு முத்திரைத் தாள்கள் என்.சதீஸ்குமார், கரூர் என்பவரது பெயரில் 11.11.2011 ம்தேதி விற்கப்பட்டுள்ளதாகவும், 6009 முதல் 7006 வரையான முத்திரைத்தாள்கள் இந்திய அரசாங்கத்தால் அச்சடிக்கப்பட்டது என்றால் சரிதான், போலியானது அல்ல என்றும் வாக்குமூலம் அளித்துள்ளார். அசல் வழக்கில் உபய தரப்பு சாட்சியங்களும் கடந்த 15.12.2023 ம் தேதியன்று முடிவுற்று வாதி தரப்பு விவாதத்திற்காக 4.1.2024 ம் தேதி வாய்தா ஏற்பட்ட நிலையில், வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் 15.11.2011 ம் தேதிய பவர் ஆவணத்தைப் பொறுத்து எழுவினா வனைய வேண்டும் என்று சொல்லி மனுதாரர் தரப்பில் இ.ம.எண் 3/2024 தாக்கல் செய்ததில் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி உத்தரவின் பேரில் மனுதாரர் மாண்புமிகு

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP No. 766/2025 ல் சீராய்வு மனு தாக்கல் செய்து அம்மனுவும் 26.3.2025 ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி உத்தரவு பாரா 5 ல் the plaintiff cannot be permitted to challenge the validity of the said power deed at this point ot time என தெளிவான உத்தரவு பிறப்பித்துள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட முறை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கடந்த 15.11.2011 ம் தேதிய பவர் ஆவணம் பற்றி ஒரு தெளிவான தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் அதே ஆவணத்தை செல்லாது என விளம்புகை கோரி பிராதை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ?

5) விசாரணையின்போது இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகளோ ஆவணங்களோ முன்னிடப்படவில்லை.

6) **<u>தீர்வு</u>** :-

மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தின் போது 1ம் பிரதிவாதி 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயர்களில் 13.08.2014 ம் தேதி ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்குரை 6 ஆவது பத்தியில், வாதி, பார்த்தசாரதி என்பவரது விருப்பப்படி 1ம் பிரதிவாதியின் பெயரில் பார்த்தசாரதி தயார் செய்து கொண்டு வந்த 15.11.2011

தேதிய அதிகார ஆவணத்தை பொறுப்புக்காக பதிவு செய்ததாகவும், வாதிக்கு 1ம் பிரதிவாதியை யார் என்றே தெரியாதென்றும், அந்த அதிகார ஆவணம் உண்மையானதல்ல என்றும், அந்த ஆவணத்தில் ரூ.50/– முத்திரைத்தாள் மதிப்புள்ள ஆறு தாள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதில் வரிசை எண்கள்.7000 முதல் 7002 வரை உள்ள மூன்று தாள்கள் 1ம் பிரதிவாதி பெயரில் வாங்கப்படாமல் சதாம் உசேன் என்பவர் பெயரில் வாங்கப்பட்டுள்ளதாகவும் அவை மூன்றும் 01.12.2011 ம் தேதி விற்பனை செய்யப்பட்ட ரூ.1000/– மதிப்புள்ள முத்திரைத் தாள்கள் என்றும் மேற்சொன்ன 15.11.2011 தேதிய அதிகார ஆவணத்தில் வரிசை எண்கள்.7003 மற்றும் 7004 ஆகியவை 01.12.2011 தேதியில் ரூ.1000/– மதிப்புள்ள தாள்களாக திண்டுக்கல், சேவியர் ராஜ் என்பவருக்கு விற்பனை செய்யப்பட்டதாக காணப்படுவதாகவும் மேற்சொன்ன ஐந்து முத்திரைத் தாள்களும் ரூ,50/– மதிப்புடைய தாள்கள் அல்ல என்பதால் 1ம் பிரதிவாதி மேற்படி முத்திரைத் தாள்களை உற்பத்தி செய்து அதில் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளதாகவும், இந்த அதிகார ஆவணத்தை அடிப்படையாக வைத்து 11.08.2014 ம் தேதி 1ம் பிரதிவாதி 3 மற்றும் 4 பிரதிவாதிகள் பெயர்களில் மலரணையான ஒரு கிரைய ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளதாகவும் சாட்சிய விசாரணை முடிந்து விவாதத்திற்காக அசல் வழக்கு வாய்தா ஏற்பட்ட நிலையில் தற்போது தான் போலியான முத்திரைத் தாள்கள் அதிகார ஆவணத்தில் பயன்படுத்தப்பட்டிருப்பது தெரிய வந்ததாகவும் எனவே 1ம் பிரதிவாதி பெயரில்

பொறுப்புக்காக ஏற்படுத்தப்பட்ட 15.11.2011ம் தேதிய போலியான அதிகார ஆவணம் தொடர்பாக விளம்புகை பரிகாரம் கேட்க தெய்வாதீனமாக விடுபட்டுப் போய்விட்டதாகவும், 15.11.2011ம் தேதிய அதிகார ஆவணம் இந்திய முத்திரைச் சட்டம் 1925 விதி 6–க்கு விரோதமானது, சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என விளம்புகைப் பரிகாரம் கோருவதற்கு அசல் மனு திருத்தம் செய்யப்படவேண்டியது அவசியமாகிறது என்றும், எனவே, அசல் வழக்கில் வாதி தரப்பில் சாட்சிகள் முடிக்கப்பட்டதை மறுதிறவு செய்து உத்தரவிடவேண்டியது அவசியமாகிறது என்றும் வாதிட்டார்.

7) 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கில் வாதுரைகளின் அடிப்படையில் ஏற்கனவே 03.01.2019 ம் தேதி எழுவினாக்கள் வனைவு செய்யப்பட்டு தற்போது விவாதத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளததாகவும், மனுதாரர்/வாதி தன் அதிகார முகவரான 1ம் எதிர்மனுதாரர் /1ம் பிரதிவாதி மூலமாக 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தை ரத்துச் செய்ய சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P.(MD) No.3222 of 2018 தாக்கல் செய்யப்பட்டு அதில் திண்டுக்கல் மாவட்ட பதிவாளர், சார்பதிவாளர் ஆகியோர் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டு அதில் மனுதாரர்/ வாதி தன் அதிகார முகவர் 1ம் எதிர்மனுதாரர் 1ம் பிரதிவாதி மூலமாக எழுதிக் கொடுத்ததை மனுதாரரே ஒப்புக் கொண்டுள்ளதாகவும் மேற்சொன்ன ரிட் மனு உத்திரவு 3 ஆவது பத்தியில் *"admittedly, on the date of registration of sale*

*deed, the third respondent is having valid power of attorney"* என்று தெளிவாக துலக்கப்பட்டுள்ளதாகவும், 15.11.2011ம் தேதிய பவர் ஆவணத்தைப் பொறுத்து எழுவினா வனைய வேண்டும் என்று சொல்லி மனுதாரர் தரப்பில் இ.ம.எண் 3/2024 தாக்கல் செய்ததில் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், மேற்படி உத்தரவின் பேரில் மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் CRP No. 766/2025ல் சீராய்வு மனு தாக்கல் செய்து அம்மனுவும் 26.3.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், மேற்படி உத்தரவு பாரா 5ல் the plaintiff cannot be permitted to challenge the validity of the said power deed at this point ot time என தெளிவான உத்தரவு பிறப்பித்துள்ளதாகவும், ஒன்றுக்கு மேற்பட்ட முறை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் கடந்த 15.11.2011ம் தேதிய பவர் ஆவணம் பற்றி ஒரு தெளிவான தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் அதே ஆவணத்தை செல்லாது என விளம்புகை கோரி பிராதை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே, மனு செலவுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

8) இருதரப்பும் கேட்கப்பட்டன. 1ம் பிரதிவாதி பெயரில் பொறுப்புக்காக ஏற்படுத்தப்பட்ட 15.11.2011ம் தேதிய அதிகார ஆவணம் இந்திய முத்திரைச் சட்டம் 1925 விதி 6-க்கு விரோதமானது, சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என விளம்புகைப் பரிகாரம் கேட்க தெய்வாதீனமாக விடுபட்டுப் போய்விட்டதாகவும், மேற்படி பரிகாரம் குறித்து பிராதினை திருத்தம் செய்வதற்கு

வழக்கினை மறுதிறவு செய்யவேண்டும் என இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு கோப்பு ஆராயப்பட்டதிலிருந்து மனுதாரர் தரப்பில் சொல்லப்படும் மேற்படி சங்கதிகளை குறித்து எழுவினா வனைய வேண்டும் என்று சொல்லி மனுதாரர் தரப்பில் இ.ம.எண் 3/2024 தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு 9.12.2024ம் தேதி இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதும், மேற்படி உத்தரவின்பேரில் மனுதாரர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற கிளையில் C.R.P.(PD)(MD) No. 766 of 2025 and C.M.P. (MD) No. 4088 of 2025 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவும் 26.3.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதை காணமுடிகிறது. மேற்படி உத்தரவில் பாரா 7–ல்

> 7. **A suit has been filed only challenging two sale deeds executed by the first defendant in favour of the defendants 3 and 4, based upon the power deed dated 15.11.2011. Though the plaintiff has averred that the power deed, dated 15.11.2011, is a forged document, no prayer was sought for by the plaintiff at the time of filing of the suit. That apart, the plaintiff has admitted the execution of the said power deed in W.P.(MD) No. 3228 of 2018. In such circumstances, when the suit is at argument stage, the question of framing of additional issues touching upon the validity of the power deed does not arise.**

என தீர்வு காணப்பட்டுள்ளது. மனுதாரர் 15.11.2011ம் தேதியிட்ட பொது அதிகார ஆவணம் குறித்த ஒரே சங்கதியை குறிப்பிட்டு ஒன்றன்பின் ஒன்றாக இந்நீதிமன்றத்திலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையிலும் மனு தாக்கல் செய்து, அம்மனுக்கள் தள்ளுபடியாகிவிட்ட நிலையில், மீண்டும் அதே காரணத்திற்காக பிராதினை திருத்தம் செய்வதற்காக அசல் மனுவினை

மறுதிறப்பு செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், நீதியின்பால் உகந்தது அல்ல என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதல்ல என இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படுகின்றது.

**முடிவாக,** இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.08 17:23:38 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்**

**சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் :-**

இருதரப்பிலும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.08 17:23:43 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்.
திண்டுக்கல்

**இடைநிலை மனு எண் 4/2025**

**-உள்-**

**அ.வ. எண்.112/2025**

உத்திரவு
நாள்.06.04.2026